**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C.C–154–2018**

| LW.16 P.W.15 | | |
|---|---|---|
| Name: | முருகவேல் | Caste: |
| Father's Name: | கல்யாணசுந்தரம் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:56/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2026

(எதிரி ஆஜர்.) சாட்சி காணொலி காட்சி வாயிலாக பாபநாசம் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

**முன் விசாரணை:**

நான் தற்போது தஞ்சாவூர் மாவட்ட, பாபநாசம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 03.03.2018–ஆம் 20.00 மணிக்கு வேதாரண்யம் காவல் உதவி ஆய்வாளர் ஜெயேந்திர சரஸ்வதி நிலைய பொறுப்பிலிருந்து, மனோகரன், த/பெ. சாம்பசிவம், செம்போடை மேற்கு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று, நிலைய குற்ற எண் 36/18 ச.பி. 279, 304(A)–இன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கு கோப்பினை ஆய்வாளர் திரு.நடராஜன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

பின்னர் 04.03.2018 அன்று காலை 06.00 மணிக்கு ஆய்வாளர் நடராஜன் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவ இடம் சென்று சாட்சிகள் விருத்தாச்சலம் மற்றும் மதியழகன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 10 வரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர், இறந்துபோனவரின் பிரேதத்தை சடலக் கூராய்வு செய்ய வேண்டி வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்துள்ளார். பிரேதத்தை மருத்துவருக்கு அடையாளம் காட்டிய தலைமைக் காவலர் முருகானந்தம் என்பவரை 04.03.2018 அன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர், அன்றைய தினமே முதல்

தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் ஜெயேந்திர சரஸ்வதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 05.03.2018 அன்று காவல் நிலையத்தில் ஆஜரான வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி ராஜு த/பெ. ஆறுமுகம் என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்.

பின்னர் விபத்து ஏற்படுத்திய TN–21–H–9000 Mahendra Scorpio மற்றும் TN–51–AD–2829 Hero Splender ஆகிய வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்காக வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்துள்ளார். பின்னர் ஆய்வாளர் நடராஜன் பணி மாறுதலில் சென்றுவிட்டதால், வழக்கு கோப்புகளை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். பட்டியல் சாட்சிகள் ஆய்வாளர் நடராஜனிடம் கூறிய விவரங்களையே என்னிடமும் கூறியதால், தனியாக வாக்குமூலம் எதுவும் பெறவில்லை.

பின்பு, வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நான், 11.08.2018 அன்று மோட்டார் வாகன ஆய்வாளர் கருப்பசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடமிருந்து **மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை பெற்று தாக்கல் செய்தேன். அ.த.சா.ஆ.11–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் விபத்தில் இறந்த நபரை பிரேத பரிசோதனை செய்த வேதாரண்யம் அரசு மருத்துவமனை மருத்துவர் மோகன்ராஜன் என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடமிருந்து பிரேத பரிசோதனை பெற்று தாக்கல் செய்தேன். அந்த **பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.12–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு அன்றைய தினமே, புலன் விசாரணையை முடித்து எதிரி மீது 279, 304(ஏ) இ.த.ச. படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எழுத்துப் பூர்வமான புகார் இவ்வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளது. எதிரி ஓட்டி வந்த காரின் நிறமானது Tungston Blue with Green என்றால், நினைவில்லை. அ.சா.1 மனோகரன் எனது விசாரணையில் வாகனத்தின் நிறம் குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரி. இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய மற்றும் விபத்திற்குள்ளான வாகனங்களை ஈரவாய்க்காலிலிருந்து கிரேன் மூலமாக தூக்கியதாக

காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரி. அதேபோல அ.சா.1 எனது விசாரணையில் மேற்படி வாகனங்களை ஈரவாய்க்காலிலிருந்து கிரேன் மூலமாக தூக்கியதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரி.

பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்கள் இறந்துபோன நபரின் உறவினர்கள் என்றால், சரியல்ல. அவரது ஊர்க்காரர்கள். சாட்சி திருநாவுக்கரசு எனது விசாரணையில் தான் சம்பவத்தின் போது குழந்தைவேல் என்பவரது பெட்டிக் கடையில் நின்று கொண்டிருந்ததாக எதுவும் சொல்லவில்லை என்றால், தான் ஈரவாய்க்கால் பிரிவு ரோட்டில் நின்று பேசிக் கொண்டிருந்ததாக சொல்லியுள்ளார். சம்பவ இடத்திற்கும், குழந்தைவேலின் பெட்டிக் கடைக்கும் இடையே 100–150 மீ. தொலைவு இருக்கும் என்றால், சரியல்ல. சுமார் 50 மீ. தொலைவு தான் இருக்கும்.

மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் சம்பவ சாலையிலிருந்து சுமார் 20 மீ. தொலைவில் வளைவான பகுதி உள்ளது என்றால், சரியல்ல. சம்பவ சாலை நேரான சாலை. இறந்து போன நபரை பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை நான் விசாரித்த வகையில், அவரது பிரேதத்தின் மீது சேறு மற்றும் சகதி இருந்ததா, இல்லையா என்பதை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. சாட்சி திருநாவுக்கரசு எனது விசாரணையில் எதிரி சம்பவத்திற்கு பிறகு ஓடி விட்டதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரி. இறந்துபோன செல்வம் சாட்சி திருநாவுக்கரசிற்கு சித்தப்பா முறை வேண்டும் என்றால், அது பற்றி என்னிடம் எதுவும் சொல்லவில்லை.

சம்பவத்தில் இறந்து போன நபர் விபத்து சமயத்தில் மேற்கிலிருந்து கிழக்காக வந்து கொண்டிருந்தார் என்றால், சரி. புகார் மற்றும் சாட்சிகளை விசாரணை செய்ததில் இறந்து போன நபர் தனது இருசக்கர வாகனத்தின் முன்பகுதி மற்றும் பின்பகுதியில் காய்கறி மூட்டைகளை சிப்பமாக வைத்து கட்டிக்கொண்டு, வியாபாரத்திற்காக மேற்கிலிருந்து கிழக்காக சென்று கொண்டிருந்தார் என்றால், சரியல்ல. இருசக்கர வாகனத்தின் பின்னால் தான் எலுமிச்சை மற்றும் தேங்காய் மூட்டைகளை கட்டிக் கொண்டு வந்ததாக சொல்லப்பட்டுள்ளது.

மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கு பின்பகுதியில் தான் குழந்தைவேலின் பெட்டிக்கடை காட்டப்பட்டுள்ளது என்றால், சம்பவ இடத்திலிருந்து தென்கிழக்காக மேற்படி பெட்டிக்கடை மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. மேற்படி பெட்டிக்கடையை இறந்து போன நபர் கடப்பதற்கு முன்பாகவே இவ்வழக்கு விபத்து ஏற்பட்டுள்ளது என்றால், கடைக்கு மேற்காக விபத்து நடந்துள்ளது. சாட்சி பன்னீர்செல்வம் குழந்தைவேல் பெட்டிக்கடையில் நின்று கொண்டிருக்கும்போது விபத்தை பார்த்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால், ஈரவாய்க்கால் பிரிவு ரோட்டில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது, விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளார்.

சாட்சி பன்னீர்செல்வம் மற்றும் மாரியப்பன் எனது விசாரணையில் விபத்து ஏற்படுத்திய இரண்டு வாகனங்களும் ஈரவாய்க்காலில் விழுந்ததாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரி. சாட்சி மாரியப்பன் எனது விசாரணையில் இறந்துபோன செல்வத்தை தான் சென்று தூக்கியதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்களான பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் போன்றவை காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும், கண்ணுற்ற சாட்சிகளாக சேர்க்கப்பட்ட சாட்சிகள் யாரும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், சரிவர விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..S. Dineshkumar, 03.03.2026)**
**Vedaranyam(F.A.C.)**